

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர திமுக சார்பில் செஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் .அருகில்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் ,நகர செயலாளர் கார்த்திக் உள்ளனர்,



பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு, நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு நகரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் ஆர்.நடேசன் , தியாகராஜன், நகர்மன்றத் தலைவர் நளினி சுரேஷ் பாபு, நகரச் செயலாளர் கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர் தங்கவேல், ராஜபாண்டி ராஜவேலு, மாநில சமூக வலைதள பொறுப்பாளர் ரியா, மாவட்ட சார்பு நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்,

# தந்தை பெரியார் 146வது பிறந்த நாள் சமூக நீதி நாளாக கொண்டாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி, செப். 17 -

தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் “சமூக நீதி” நாளாக கடைப் பிடிக்க வேண்டும் என்று கழக தலைவர் அவர்கள் அறிவித்தற்கிணங்க மறைந்த தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (17.09.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 8.30 மணி அளவில் மாநகர செயலாளரும் மண்டல தலைவருமான மு.மதி வாணன் தலைமையில்

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.என். சேகரன், வண்ணை அரங்கநாதன், பி.எம். சபியுல்லா ஆகியோர் முன்னிலையில் திருச்சி மாநகர கழகத்துக்கு உட்பட்ட காட்டூர் பகுதியில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருஉருவசிலைக்கு மாலை அணிவித்து “சமூக நீதி நாள் உறுதி மொழியை” ஏற்றுக் கொள்வார்கள் .

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட,மாநகர நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி,ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட,தொகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் கழக தொண்டர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தஞ்சை தெற்கு மாவட்டம்,

# அதிராம்பட்டினம் மேற்கு நகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. சிறப்புரை! என்.அசோக்குமார் எம்.எல்.ஏ. முன்னிலை!

தஞ்சாவூர், செப்.17 –

தஞ்சாவூர் தெற்கு மாவட்டம், அதிராம்பட்டினம் மேற்கு நகர தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்தியாவின் 2வது பொருளாதார மண்டலமாக தமிழ்நாட்டு திகழ பாடுபடும் கழகத் தலைவருக்கு நன்றிய்யையும், வாழ்த்துகளையும், பார்முலா 4 கார் பந்தயத்தை சென்னையில் நடத்தி உலகைமே தமிழகத்தை திரும்பி பார்க்க வைத்த கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் அதிராம்பட்டினம் மேற்கு நகர கழக பொறுப்பாளர் எஸ்.ஹெச்..அஸ்லம் வரவேற்புரை யாற்றினார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் என்.அசோக்குமார் எம். எல்.ஏ, பழஞ்சூர் கே.செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ சிறப்புரையாற்றி னார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆர்.பி.ரமேஷ், பொன்.சத்தியமூர்த்தி, ஞா.மைக்கேல மம்மாள், பொதுக்குழு உறுப்பினர்கள் அப்துல் மஜீத், உமர்தம்பி பாட்சா மரைக்காயர், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் N.A.முகம் மது யூசுப், M.சேக்தாவுது, S.ரிபாயா மற்றும் மாவட்டக் பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.

அதிராம்பட்டினம் நகர கழகத்தின் நிர்வாக வசதிக்காகவும், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், அதிராம்பட்டினம் நகர கழகத்தை மேற்கு1, மற்றும் கிழக்கு2 என 2 கழகங்களாக பிரித்து அறிவித்த மாநில தலைவர் தளபதி அவர்களுக்கும், அதிராம்பட்டினம் 2 நகர கழகங்களாக பிரிப்பதற்கு பரிந்துரை செய்து உறுதுணையாக இருந்த மாவட்ட செயலாளர் கா. அண்ணாதுரை அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பயனடையும் வகையில் வழங்கிய திட்டங்களை தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் எடுத்துரைத்து நடைபெற்ற 18வது நாடாளுமன்றத் தேர்தலில் 40 நாடாளுமன்றத் தொகுதிகளையும் கைப்பற்றி 100 சதவிகித வெற்றி வாகை சூட பாடுபட்ட முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களுக்கும், மாநில இளைஞர் அணிச் செயலாளர், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியுடன் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அமெரிக்கா சென்று, முதலீட்டா லர்களை சந்தித்து, தமிழ் நாட்டை இந்தியாவின் 2வது பொருளாதார மாநிலமாகத் திகழ முதலீடுகளை ஈர்க்க காரணமாக இருந்து வரும் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுகளையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

தஞ்சை பாராளுமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட ச. முரசொலி அவர்களை பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றிப்பெற பாடுபட்ட தஞ்சை தெற்கு மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சருமான திரு: அன்பில் மகேஷ் அன்பில் பொய்யாமொழி அவர்களுக்கும், தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளரும், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரான திரு: கா. அண்ணாதுரை அவர்களுக்கும் நன்றியுடன் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

வரும் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் திமுக 200 இடங்களை பிடிக்க கட்சியின் தலைவரும், முதல்வருமான மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்கள். இதனடிப்படையில் தஞ்சை தெற்கு மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் திமுக வெற்றி பெறுவதற்கான வியூகம் அமைத்து, திமுக வின் வெற்றிக்கு அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றுவது என தீர்மானிக்கப் பட்டது.

வரும் செப்டம்பர் 17ல் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் அதிராம்பட்டினம் மேற்கு நகர சார்பில் திராளானோர் சென்று பங்கேற்பது என்றும், கழகத் தலைவர் தளபதியார் சாதனை திட்டங்களை விளக்குமுகமாக நகரில் சுவர் விளம்பரம் செய்வது என்றும், கழகத்தின் முப்பேரும் விழாவை முன்னிட்டு நகரில் உள்ள அனைத்து கழக கொடி கம்பங்களை புதுப்பித்து கொடி ஏற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதிராம்பட்டினம் மேற்கு நகர கழகத்தில் சார்பில் நகர கழக சார்பு அணிகளுக்கான பொறுப்பாளர்களை ஒருவார காலத்திற் குள் நியமனம் செய்த பட்டியலை மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு அனுப்புவது என தீர்மானிக்கப்ப ட்டது.

இரங்கல் தீர்மானம்:

அதிராம்பட்டினம் காதர் முகைதீன் ஆண்கள் மேல் நிலை பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்த, நரசிங்கபுரத்தைச் சேர்ந்த சரவணன் என்பவரின் மகன் 13 வயதுடைய தருண் குமார் விபத்தில் மூளைச் சாவு அடைந்த மாணவனின் உடல் உறுப்புகள் தானமாக வழங்கி அரசு சார்பில் இறுதி மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்ட மாணவனுக்கு இரங்கல் தெரிவிக்கப்படுகிறது.

### மாவட்டச் செயலாளர் – பொறுப்பாளர்கள் கவனத்திற்கு...

# தந்தை பெரியார் பிறந்த நாள் “சமூக நீதி நாள்” உறுதிமொழி ஏற்பு!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

**“தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் “சமூகநீதி நாளாக” கடைபிடிக்கப்படும் என்றும்; அப்பிறந்த நாள் அன்று “சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்க வேண்டும்” என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 6.9.2021 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க;**

**தந்தை பெரியார் பிறந்த நாளான 17.9.2024 அன்று காலை 10.30 மணி அளவில், அந்தந்த மாவட்டக் கழக அலுவலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் அறிவித்த பின்வரும் “சமூகநீதி நாள் உறுதிமொழி” ஏற்பு நிகழ்ச்சியினை நடத்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

### “சமூக நீதி நாள் உறுதிமொழி”

- **‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற அன்பு நெறியும் - ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற பண்பு நெறியும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைபிடிப்பேன்!**
- **சுயமரியாதை ஆளுமைத்திறனும் - பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!**
- **சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்!**
- **மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்!**
- **சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்!**

**இந்நிகழ்ச்சியில் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**நாள் : 15–9–2024.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### சென்னையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் பங்கேற்றிட

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி வேண்டுகோள்!



விழுப்புரம், செப். 17 -

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டை தலைநிமிர வைத்த தலைமகன் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் , பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பிறந்த நாள் , மாநில சுயாட்சி என்ற சொல்லுக்கு உயிரூட்டிய இயக்கமாம் நமதுதிராவிட முன்னேற்றக் கழகம் தோற்று விக்க ப் பட்ட நாள் என முப்பெரும் விழாவை கொண்டாட கழகத்தலைவர் - முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணையேற்று இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி கழக துணைப் பொதுச் செயலாளர் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனைப் படி, சென்னையில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்ள இன்று (17. 09.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 11 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் இருந்து கழகத் தோழர்கள் புறப்பட்டுச் செல்வோம்.

கழகம் தோற்றுவிக்கப் பட்ட பவள விழா ஆண்டாம் இந்த ஆண்டை சிறப்பாக கொண்டாட கழகத் தலைவர் அவர்களின் இல்லந்தோறும் கழக கொடிகள் எனும் அறிவுரைப்படி நமது கழகத் தோழர்கள் அனைவரின் இல்லங்கள் , அலுவலகங்கள் , வணிக நிறுவனங்கள் அனைத்திலும் கழகக் கொடிகள் பறந்திட செய்திட வேண்டும் என கழகத் தோழர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம் – திருச்செங்கோட்டில்

# பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு!

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் வழங்கினார்!

நாமக்கல், செப். 17 -

ஆயிரங்காலத்து பயிராம் தி.மு.க எனும் மாபெரும் மக்கள் எழுச்சி இயக்கத்தை தோற்றுவித்த வரும், தமிழ் நாடு என்று பெயர் சூட்டியதன் மூலம், தாய்க்குப் பெயர் தந்த தலைமகனும் ஆன பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு, நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு நகரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வாலரை கேட் பகுதியில் உள்ள கொடி கம்பத்தில் சமத்துவம் மற்றும் சமுக நீதி காக்கும் நமது கழக இரு வண்ண கொடியை மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஏற்றினார்.

பேரறிஞர் அண்ணா அவர்கைளின் சிலை அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன் , சந்தைப்பேட்டை மேட்டில் நடைபெற்ற கொடியேற்று விழாவில் கழக மூத்த முன்னோடியும், மாவட்ட வர்த்தக அணி துணை தலைவருமான தியாகராஜன், வேலூர் ரோடு, TAPCMS அருகில் திருச்செங்கோடு நகர மன்ற தலைவர் நளினி சுரேஷ் பாபு ஆகியோர் கழக இரு வண்ண கொடி ஏற்றி பொதுமக்களுக்கும் கழகத்தினருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் நகரக் கழக செயலாளர் கார்த்திகேயன், ஒன்றிய கழக செயலாளர் தங்கவேல், ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ராஜ பாண்டி ராஜவேலு, மாநில சமூக வலைதள பொறுப்பாளர் ரியா மாவட்ட சார்பு நிர்வாகி கள், கழக நிர்வாகிகள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது ஆண்டு பிறந்தநாளையொட்டி தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ சுப்ரமணி தலைமையில் நகர கழக செயலாளர் நாட்டான் மாது ஏற்பாட்டில் தர்மபுரி நான்கு ரோடு அருகிலுள்ள அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதுசமயம் நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது, மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், நகர நிர்வாகிகள், மகளிர் அணி உள்ளிட்ட மாவட்ட அணிகளின் பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர,பேரூர் கழக,கிளைக் கழக செயலாளர்கள், தர்மபுரி நகர மன்ற உறுப்பினர்கள், வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாள் விழாவையொட்டி பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் பையர்நத்தத்தில்,தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆகியோர் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.உடன் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சரவணன்,கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துக்குமார்,ஊராட்சிமன்ற தலைவர்கள் சாந்தாகுப்புசாமி,திருமலாதினேஷ்,ஜெயகுமார் மற்றும் கிளைக்கழக செயலாளர்கள்,உள்ளிட்ட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.